19.10.2023
ELOP.No.36/2022

ம. சா. 1 கார்த்தியாயிணி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-

நான் எம்.ஏ.,பி.எட். படித்துள்ளேன். ஆயக்குடி பேரூராட்சியில் நான் வார்டு எண். 16 க்கு வேட்பாளராக போட்டியிட்டேன் என்றால் சரிதான். அந்த வார்டு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட வார்டு என்றால் சரிதான். நான் கட்சி சார்பாக போட்டியிடவில்லை. நானும் என் கணவரும் ஏற்கனவே விடுதலை சிறுத்தை கட்சியில் உறுப்பினராக இருந்திருக்கிறோம் என்றால் நான் இல்லை. என் கணவர் பழனியில் விடுதலை சிறுத்தை கட்சியின் ஒன்றிய செயலாளராக இருந்துள்ளார். அதனால் முதலில் என் கணவரும் நானும் விடுதலை சிறுத்தை கட்சியில் சீட்டு கேட்டோம் என்றால் சரிதான். ஆனால் எங்களுக்கு கொடுக்காததால் நான் தனியாக போட்டியிட்டேன் என்றால் சரிதான். என்னுடைய சின்னம் வைரம் சின்னம் என்றால் சரிதான். 16 வது வார்டுக்கு 8 பேர் போட்டியிட்டோம். 1 ம் எதிர்மனுதாரர் சரஸ்வதி என்னை எதிர்த்து விடுதலை சிறுத்தை கட்சியில் போட்டியிட்டார். 1 ம் எதிர்மனுதாரருக்கு குலையுடன் கூடிய தென்னைமரம் சின்னமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். வாக்காளர் பட்டியலில் பாகம் எண்.1, வரிசை எண்.763 ல் 1 ம் எதிர்மனுதாரரின் பெயர் உள்ளது என்றால் சரிதான். 1 ம் எதிர்மனுதாரர் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். எதன் அடிப்படையில் தேர்தல் செல்லாது என பரிகாரம் கோரி உள்ளேன் என்றால் இறந்த நபர் பெயரில் 1 ம் எதிர்மனுதாரருக்கு முன்மொழிவு செய்யப்பட்டதால் அதன் அடிப்படையில் தேர்தல் செல்லாது என மனு தாக்கல் செய்துள்ளேன். அந்த குற்றச்சாட்டை தவிர வேறு குற்றச்சாட்டு எதுவும் கிடையாது என்றால் சரிதான். 1 ம் எதிர்மனுதாரருக்கு முன்மொழிந்தவர் பெயர் வேலுச்சாமி என ரெக்கார்டில் உள்ளது என்றால் சரிதான். அந்த வேலுச்சாமி இறந்து போனவர். இறந்துபோனதாகச் சொல்லப்படும் வேலுச்சாமி வாக்காளர் பட்டியலில் எத்தனாவது வரிசை எண்ணில் இருக்கிறார் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. வேலுச்சாமியின் தகப்பனார் பெயர் சின்னத்தம்பி. சின்னத்தம்பி மகன் வேலுச்சாமியைத்தான் இறந்துவிட்டதாகச் சொல்கிறேன் என்றால் சரிதான். அந்த வேலுச்சாமி மிலிட்டரியில் வேலை பார்த்தவரா என்றால் ஆமாம்.

மிலிட்டரியில் வேலை பார்த்து வந்த வேலுச்சாமிதான் இறந்துவிட்டதாக சொல்கிறேன் என்றால் சரிதான். வாக்காளர் பட்டியலில் மற்றொரு சின்னத்தம்பி மகன் வேலுச்சாமி விவசாயி பெயர் உள்ளது என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியுமா என்றாலும் எனக்கு சரியாக ஞாபகமில்லை. சின்னத்தம்பிக்கு 5 மகன்கள், இரண்டு மகள்கள். அவர்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளது என்றால் சரிதான். அந்த ஐந்து மகன்களும் என்ன வேலை பார்த்து வருகிறார்கள் என்பது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். அந்த 5 மகன்கள் பெயர்கள் 1. சுப்ரமணி, 2.பாலமுருகன், 3. வேலுச்சாமி, 4. சக்திவேல், 5. கருப்புத்துரை. 4 வது மகன் சக்திவேல் என்பவரது பெயர்தான் வேட்பாளர் பட்டியலில் உள்ளதா என ஞாபகமில்லை. எனக்கு தெரியும் என்றாலும், பொய்யாக ஞாபகமில்லை என்று சொல்கிறேன் என்றாலும், 4 வது மகன் பெயர் வேலுச்சாமி எனத்தான் வாக்காளர் பட்டியலில் உள்ளது என்றாலும் சரியல்ல. இறந்துபோன நபர் பெயர் முன்மொழியப்பட்ட விவரம் தேர்தலின் போதே எனக்கு தெரியும் என்றால் தெரியாது. வாக்காளர் எண்ணிக்கைக்கு முன்னர் தான் தெரியவந்தது. நான் சொல்வது தவறு என்றும் எனக்கு யார் முன் மொழிந்தார் என்பதும் அவர் உயிருடன் இருக்கிறார் என்பது தெரியும் என்றும், இறந்த வேலுச்சாமி மிலிட்டரியில் வேலை பார்த்து வந்த விவரமும் தெரியும் என்றும் எல்லாவற்றையும் மறைத்து ஞாபகமில்லை என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அனைத்து விவரமும் சரியாக இருந்ததால்தான் வேட்புமனு பரிசீலிக்கையில் நான் தேர்தல் அதிகாரியிடம் புகார் மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் அப்போது எனக்கு தெரியாது. உயிருடன் இருக்கிற சின்னத்தம்பி மகன் வேலுச்சாமி விவசாயி என்றும், அவர்தான் 1 ம் எதிர்மனுதாரரை முன்மொழிந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. மிலிட்ரிக்காரரர் வேலுச்சாமி இறந்ததால் அதை சாக்காக வைத்துக்கொண்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சின்னத்தம்பி மகன் வேலுச்சாமி, விவசாயி என்பவரது பெயர் வேட்பாளர் பட்டியலில் இருக்கிறது என்று சொன்னால் இல்லை. இந்த தேர்தலுக்கு முன்பு தேர்தல் அறிவிக்கப்பட்டு ரத்தானது என்றால் இல்லை. அவ்வாறு தேர்தல் அறிவிக்கப்பட்டது என்றாலும் அந்த தேர்தலில் 1 ம் எதிர்மனுதாரர் மனுச்செய்தார் என்றாலும், நான் மனு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. சட்டப்படியாக 1 ம் எதிர்மனுதாரர் மனுச் செய்து எந்தவிதமான சட்டவிரோதமான காரியங்களிலும் ஈடுபடாமல் உயிருடன்

இருக்கிற சின்னத்தம்பி மகன் வேலுச்சாமியை கொண்டுதான் அவருடைய தேர்தல் மனுவை முன்மொழிந்தார் என்றால் சரியல்ல. என்னுடைய புகார் மனுவும் இம்மனுவும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**8** முதல் **10** ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை :-

5.2.2022 ம் தேதி வேட்புமனுக்கள் பரிசீலிக்கப்பட்டது என்றால் சரிதான். அப்போது தேர்தல் அதிகாரி வேட்புமனுவை சரிபார்க்கும்போது எல்லா வேட்பாளர்களுக்கும் வாக்காளர் பட்டியலை வைத்து யார் யார் முன் மொழிந்தார்கள் என்பதை சரிபார்த்து வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டது என்றால் சரிதான். வேட்புமனுக்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்ட பின் அதில் இறந்தவர்தான் முன்மொழிந்துள்ளார் என நான் ஆட்சேபித்தேனா என்றால் அப்போது எனக்கு தெரியாது. வேட்புமனு அனுமதிக்கப்பட்டு அதை நான் ஒப்புக்கொண்டபின்னர் தற்போது நான் இம்மனுவை தாக்கல் செய்திருப்பது அது Estoppel ஆகிவிட்டது என்றால் சரியல்ல. 16 வது வார்டில் வெற்றிபெற்றவர் 1 ம் எதிர்மனுதாரர் வாஞ்சிநாதன் மனைவி சரஸ்வதி என்றால் சரிதான். அவருக்கு முன்மொழிந்தவர் 16 வது வார்டு வாக்காளர் பட்டியல் பாகம் 1 ல் வரிசை எண்.49 ல் உள்ள சின்னத்தம்பி மகன் வேலுச்சாமி என்பவர்தான் முன்மொழிந்துள்ளார் என்றால் இல்லை. இறந்துபோன சின்னத்தம்பி மகன் வேலுச்சாமி என்பவர் 16 வது வார்டு வாக்காளர் பட்டியல் பாகம் 1 ல் வரிசை எண். 13 ல் உள்ளவர் என்றால் சரியல்ல. வாக்காளர் எண்ணிக்கையில் பிரச்சனை ஏற்பட்டதாக மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாக்கு எண்ணும்போது பிரச்சனை ஏற்பட்டு வாக்கு வித்தியாசம் ஏற்பட்டதால்தான் இதுபோன்ற மனுவை தாக்கல் செய்ய முடியும் என்றாலும், ஏற்கனவே முன்மொழிவு செய்யப்பட்டு அதை நான் ஒப்புக்கொண்டு தேர்தல் நடைபெற்று தேர்தல் அறிக்கை அறிவிக்கப்பட்ட பின்னர் மேற்சொன்ன காரணத்தினால் இம்மனுவை தாக்கல் செய்ய இயலாது என்றாலும் சரியல்ல. எனவே இவ்வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை :- இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2023.10.19 16:40:11 +0530

Principal District Judge,
Dindigul.